மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வியில் எல்லோருக்கும் எப்படி துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுக்க முடியும்? இன்னும் 10 நிமிடங்களுக்குள் கேள்வி நேரத்தை முடிக்க வேண்டும். எல்லோருக்கும் வாய்ப்பு வேண்டுமென்று கேட்கிற முறையே தவறு.

திரு. சி. ஆறுமுகம்: எல்லோரும் கேள்வி கேட்கத்தான் இங்கே வந்திருக்கிறோம். முக்கியமான கேள்வியாக இருந்தால் பலர் கேட்கத்தான் செய்வார்கள். நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: நான் கேட்ட கேள்வி சம்பந்தப்பட்ட ஊரையாவது சொல்லிவிடுகிறேன். அனுமதி.... (திரு. சி. ஆறுமுகம் உட்கார்ந்துகொண்டே பேசிக் கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாரும் உட்கார்ந்து பேசக் கூடாது. என்னை வற்புறுத்தி யாரும் கேட்க முடியாது. நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன். அதன் பிறகு முன் கேள்வியில் துணைகேள்வி கேட்க வாய்ப்பு வேண்டுமென்று கேட்ப சரியல்ல. நான் தீர்ப்பு சொன்ன பிறகு மறுபடியும் அதுபற்றி கேட்கக் கூடாது.

எலி ஒழிப்புத் திட்டம்

*வினா எண். 391

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்:
திரு. என். கிட்டப்பா:

மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வயல் பயிர்களை நாசம் செய்யும் எலிகளை ஒழிப்பதற்கு விவசாயிகள் அரசிடம் முறையிட்டுக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது சம்பந்தமாக அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) குறிப்பிட்ட கோரிக்கை ஏதும் வரவில்லை.

(ஆ) எலிகளை ஒழிக்கும் திட்டம் விவசாயத் துறையில் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக எல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றது. எலிகளை ஒழிக்கும் மருந்துகள் போதுமான அளவு வேளாண்மைத் துறையின்

1979 மார்ச் 14]

கிடங்குகளின் மூலமாக உழவர்களுக்குக் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. விவசாயப் பணியாளர்கள், எலி ஒழிக்கும் முறைகளை விளம்பரப்படுத்துகின்றனர்.

[முற்பகல் 9—50]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, எலிகளை ஒழிப்பதற்கு என்னென்ன மருந்துகள் கொடுக்கப்படுகின்றன? இப்போது உலகம் முழுவதும் 3 கோடி எலிகள் இருப்பதாகச் செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. எலிகள் விவசாய உற்பத்திக்கு பெரிதும் பாதகத்தை ஏற்படுத்துகின்றன. பெங்களூர் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தில் எலிகளை ஒழிப்பதற்கு ஒரு மருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே அதையும் பயன்படுத்தி எலிகளை ஒழிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, எலிகளை ஒழிப்பதற்குரிய மருந்துகளான துத்தநாக பாஸ்பைடு, அலுமினியம் பாஸ்பைடு மாத்திரைகள் போதுமான அளவு வேளாண்மைக் கிடங்குகளின் மூலமாக உழவர்களுக்குக் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. நம்முடைய உற்பத்தியில் ஏறத்தாழ 5 சதவீதம் உணவை எலிகள் தின்றுவிடுகின்றன. ஒரு மனிதனுக்குரிய உணவை பத்து எலிகள் சேர்ந்து சாப்பிட்டு விடுகின்றன. ஆகவே இந்தக் கணக்கு எல்லாம் போடப்பட்டுத் தான் எலிகளை ஒழிப்பதற்கு வேளாண்மைத்துறை தீவிரமாக செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மற்ற இடங்களை விட தமிழகத்தினுடைய நெற்களஞ்சியங்களாகிய தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கு ஒரு தனியான திட்டத்தை, எலிகளை ஒழிப்பதற்காக உருவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இதுபற்றி மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர் அவர்கள் கூட இங்கே குறிப்பிட்டார்கள். அதாவது தற்போது ஒரு புதிய முறை எலிகளை ஒழிப்பதற்குக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூட வந்திருக்கின்றன. அரசு அதனைப் பரிசீலனை செய்து அந்த முறையைப் பின்பற்ற முன் வருமா? மற்ற எல்லாவற்றையும் பின்பற்ற முடியாவிட்டாலும் எலிகளை ஒழிப்பதற்காக பூனைகளை வளர்க்கின்ற ஒருதிட்டத்தை யாவது ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, எலிகளை ஒழிப்பதற்கு நான்கு வகையான வழிகள் வேளாண்மைத் துறையின் மூலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. துத்தநாக பாஸ்பைடு என்ற நச்சு மருந்தை

உணவுப் பொருட்களுடன் கலந்து வைப்பது ஒரு முறை. 2½ கிராமம் 10 சத போரேட்டுக் குருணைகளை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து எலிகளின் வளைகளில் ஊற்றுதல் மற்றொரு முறை. விசைத் தெளிப்பான் வெளிப்போக்கும் நச்சு வாயுவை எலி வளைகளுள் செலுத்தல் என்பது மூன்றாவது முறை. எலிப்பொறி வைத்தல் என்பது நான்காவது முறை. இப்படி இந்த நான்கு வகைகளில் எலி ஒழிப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் சொல்வதைப் போன்று பூனைகள் வளர்க்கும் திட்டத்தை நமது அரசு ஏற்படுத்தவில்லை. வேண்டுமானால் அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் அவர்கள் சார்ந்திருக்கக் கூடிய கட்சியிலே இருக்கின்றவர்கள் பூனைகளை வளர்க்கின்ற திட்டத்தை, அது பயன் உள்ளதாக இருந்தால், பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : பேரவைத் தலைவரவர்களே, கேரளாவில் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களிலே தவளைகளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஒரு தவளைக்கு 25 பைசா என்ற அளவில் கொடுக்கின்ற ஒரு திட்டமும் இருக்கின்றது. தமிழகத்தில் எலிகள் பெரிதாக வளர்ந்து பெருச்சாளிகளாக மாறி இருக்கின்றன. ஆகவே அந்தப் பெருச்சாளிகளைப் பிடிப்பதற்கும் இந்த அரசு திட்டம் வகுக்க முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவ அவர்களே, எலிகளை ஒழிப்பதற்குத் திட்டம் இருக்கின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெருச்சாளி என்று சொன்னார்கள். பெருச்சாளி என்று சொல்கின்றபோது எந்தப் பெருச்சாளியைப் பற்றிச் சொல்கிறார் என்பது தெரியவில்லை. மேலும் தவளைகளைப் பிடித்துக் கொடுத்தால் 25 பைசா கொடுக்கின்ற திட்டம் கேரளாவில் செயல்படுத்தப்படுவதாகச் சொன்னார்கள். இதுபோன்று அதாவது ஊக்க போனஸ் போன்று கொடுக்கப்பட்டால் மீண்டும் எலிகளை வளர்க்கின்ற திட்டத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஆரம்பித்து விடுவார்களே என்று பயப்பட வேண்டியிருக்கிறது. ஒரு எலிக்கு 25 பைசா என்று வைத்துவிட்டால் மீண்டும் எலிகள் பெருகுகின்ற பயங்கரமான நிலை ஏற்பட்டுவிடும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான யோசனையை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே.......

திரு. சி. ஆறுமுகம் : இன்று பெருச்சாளிகள் பூராவும் ஆளும் கட்சிப் பக்கத்திற்குப் போய்விட்டது. நாங்கள் ஹாப்பியாக இருக்கிறோம்.

1979 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் பெருச்சாளிகள் என்றுதான் சொன்னார்கள். ஆறுமுகம் ஏன் அதற்காகக் கோபித்துக் கொள்ளவேண்டும். மக்களை பெருச்சாளிகளாக ஆக்காதீர்கள்.

திரு. சி. ஆறுமுகம் : உங்களுக்குப் புரிவதுபோல் எங்களுக்கும் புரியும்.

திரு. கே. கந்தசாமி : எலிகளை ஒழிப்பதற்கு நான்குமுறை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நான்கு முறைகளினாலும் செலவுதான் அதிகமாகும். அப்படி எலிகளைக் கொன்று பயன் இல்லை. ஆகவே எலிகளைப் பிடிப்பதற்காக திரு. பண்ணை சேதுராம் அவர்கள் சொன்னதுபோல் நான்கணா இல்லை என்றாலும் ஒரு எலிக்கு 10 பைசா கொடுத்தால் அதைப் பிடிக்க பல பேர்கள் இருக்கிறார்கள் கிராமங்களில். அதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும். எலிகள் தின்று உணவு பொருள்கள் ஐந்து சதவீதம் பாழாவதும் தவிர்க்கப்படும். அதோடு இப்போது மாமிசத்தின் விலை கிடுகிடுவென்று ஏறிக் கொண்டே போகிறது. எலிகளைச் சாப்பிடக்கூடிய மக்களும் இருக்கிறார்கள் ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் எலி ஸ்டால் ஒன்று 'ஓப்பன்' செய்து.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வியா? விவாதமா? தயவுசெய்து, இன்னொரு தடவை இப்படிக்கேள்வியை நீட்டித்துக் கொண்டு போனால் நான் அனுமதி தருவதற்கில்லை. ஆகவே கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன், விவசாயி நான் கஷ்டப் படுகிறேன். விவசாயிகளின் கஷ்டத்தைச் சொல்கிறேன். இப் போது பொரி வாங்கிப் போடச் சொல்கிறார்கள். மனிதன் தின்பதற்கே பொரியில்லை. எலிகளை மனிதன் தின்கிறான் அது ஒரு உணவுப் பொருளாக இருக்கிறது. ஆகவே அரசாங்கம் ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் அரை கிலோ, ஒரு கிலோ என்று குறைந்த விலைக்கு எலிகளை விற்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அதனால் வருமானமும் பெருகுமே. ஆகவே இதுபற்றி அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பொறி என்றவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலைப்பொரியை நினைத்து விட்டார் போலிருக்கிறது. பொறி என்று சொன்னால் கருவி என்று பொருள். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் எலிகளைச் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னார்கள். மக்கள் வெள்ளை எலியைச் சாப்பிடுகிறார்கள். ஆனால் அதே

போன்று மற்ற எலிகளைச் சாப்பிடுவதாகத் தெரியவில்லை. அப்படிச் சாப்பிடுகிறார்கள் என்றால் அவர்களுடைய தொகுதியில் அப்படி இருக்கிறார்களோ என்னவோ, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : இந்தியாவில் 480 கோடி எலிகள் இருப்பதாகவும், 15 இலட்சம் டன் உணவை அவைகள் சாப்பிடுவதாகவும் சொல்லப்படுகிறது. எலிகளுக்கு வைக்கிற மருந்துகளை அவை தின்றுவிட்டு கொழுத்துவிடுவதால் பூனைகளால் எலிகளை பிடிக்க முடிவதில்லை. ஆகவே நாட்டுப் பூனைகளுக்குப் பதிலாக காட்டுப் பூனைகளை எலிகளைப் பிடிப்பதற்குப் பயன்படுத்துவதற்கான ஏற்பாட்டினை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுபோன்ற யோசனை அரசிடம் இல்லை.

திரு. சேலம் மு ஆறுமுகம்: அமைச்சர் அவர்கள்கூறிய நச்சுப் பொருள்கள் அத்தனையையும் தின்றுவிட்டு எலிகள் கொழு கொழு என்று வளர்கிறதே தவிர அவை இறப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அதிகத்திறன் படைத்த நச்சுப்பொருள்களைக் கண்டுபிடிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அந்த ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற கேள்விகள்—பதில்கள் அச்சடித்து நடவடிக்கைக் குறிப்பில் சேர்க்கப்படும்.

கிழக்குக் கடற்கரைச் சாலையில் பால வேலைகள்

*வினா எண் 373—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலையில் மேலும் எத்தனை பாலங்கள் கட்டும் உத்தேசம் உள்ளது ?

(ஆ) தற்போது வேலை நடந்துகொண்டிருப்பவை எத்தனை?

(இ) எத்தனைப் பாலங்கள் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டு பரிசீலனையில் உள்ளது?

வினா எண் 373, 374, 392–399 ஆகியவை பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப் பெற்றுள்ளன.